REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 30௳ புதன் (16—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 1௳ வியாழன் (17—11—55) [இதழ் 132

நியூயார்க்கில் மசூதி!

தாஜ்மகால் மாதிரி அமையுமாம்!

நியூயார்க், நவ. 14—

தாஜ்மகால் போல அமைப்பில் நியூயார்க் நகரில் ஐ. நா. மாளிகையின் எதிரே மசூதி ஒன்று கட்டப்படும் என்றும், அதற்கான நிதி உதவி தர முஸ்லிம் நாடுகள் ஒப்புக்கொண்டிருப்பதாயும் பிரின்ஸ்டவுன் பல்கலைக் கழகத்தின் கீழ்த்திசை மொழி இலக்கிய இலாகா தலைவர் பதேமி அறிவித்திருக்கிறாராம்.

நியூயார்க் நகரில் சுமார் 3,000 முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.

சென்னையில் வேலையில்லாக் கொடுமை

அரசாங்க அதிகாரிகள் திடீர் மறைவு?

லொனார்டி கைது

வீட்டிலேயே காவல்!

ப்யூனஸ் அயர்ஸ், நவ. 14—

பெரோனுக்குப் பிறகு பதவியேற்றிருந்து நேற்று முன்தினம் பதவி நீக்கப்பட்ட அர்ஜெண்டைனா குடியரசுத் தலைவர் லொனார்டி இப்போது கைது செய்யப்பட்டிருப்பதாயும், வீட்டிலேயே காவல் வைக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் இராணுவ 'ஜண்டா' தங்களுக்குப் பிடிக்காத இராணுவ அதிகாரிகளுக்குச் சீட்டுக் கிழிப்பதும் நடவடிக்கை எடுப்பதுமாக இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

காடுகளில் சுற்றுப்பயணம்செய்யச் சென்றவர்கள் காணப்படவில்லை

கல்கத்தா, நவ. 14—

பரிகானா பகுதியில் சுந்தர்பான்ஸ் வட்டத்தில் சுற்றுப் பயணம் சென்ற மேற்கு வங்க அரசாங்க காட்டிலாகா அதிகாரிகள் மூவர் கடந்த ஒருவார காலமாகக் காணப்படவில்லை.

அந்த வட்டத்தை பார்வையிடுவதற்காக வழக்கம்போல அவர்கள் கடந்த நவம்பர் 8-ந் தேதியன்று சென்றதாயும், இன்றுவரை காணப்படாமல் மறைந்துவிட்டதாயும் கூறப்படுகிறது.

அதிகாரிகளில் ஒருவருக்குச் சொந்தமான நோட்டுப் புத்தகம் ஒன்றும் சில மனித எலும்புகளும் அந்தக் காட்டுப்பகுதியில் காணப்பட்டதை ஒட்டி, இவர்களின் திடீர் மறைவிற்குப் பலவகை விசித்திரமான மர்மங்கள் கற்பிக்கப்படுகின்றனவாம்.

போலீசார் புலன் விசாரணை செய்கின்றனராம்.

பௌத்த சந்நியாசிகள் சர்க்கார் அமைக்கவும் தயாராம்!

கொழும்பு, நவ. 15—

நாவலப்பட்டி எனும் ஊரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பௌத்த சன்னியாசி ஒருவர் சிங்களத்தை மட்டுமே ஒரே ஆட்சி மொழியாக்கவேண்டும் என்று வற்புறுத்தினாராம்.

பௌத்த சன்னியாசிகள் ஒன்றுபடுவதைக் கண்டு சர்க்கார் அஞ்சுவதாயும், அவசியமானால் சன்னியாசிகளே சர்க்காரை அமைத்து நேர்மையாக ஆட்சி நடத்த முடியும் என்றும் அவர் கூறினாராம்.

படித்தவர் பலரின் திண்டாட்டம்

சமூகத்திற்கே பெரும் அபாய அறிவிப்பு

தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணன் எச்சரிக்கை

காரைக்குடி, நவ. 15—

தென்னாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருகிறது என்பதையும், படித்தவரிடையே இந்தக் கொடுமை அதிகரித்து வருகிறது என்பதையும் பலரும் அவ்வப்போது எடுத்துக்கூறி வருகின்றனர். இந்தியாவிலேயே அதிகமாக வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருப்போர் சென்னை மாநிலத்தவர்தான் என்றும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் பொதுவாக மக்களிடையேயும், குறிப்பாகப் படித்தவரிடையேயும் தொடர்ந்து நீடிப்பது பேராபத்து என்பதையும் பலரும் சர்க்காருக்கு இடித்துரைத்திருக்கின்றனர்.

தொழில் துறையில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும், ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாடு வஞ்சிக்கப்பட்டிருப்பதையும் கண்டித்துக் குரல் எழுப்பிய உண்மை உணர்ந்திருப்போரில் ஒருவரான சென்னை தொழிலதிபர் என். அனந்தராமகிருஷ்ணன் மீண்டும் வேலையில்லாக் கொடுமை குறித்து எச்சரித்திருக்கிறார்.

'சென்னை மாநிலத்தில் படித்தவரிடையே வேலையில்லாக் கொடுமை மிக அதிகமாக இருக்கிறது. ஏராளமான படித்தவர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் சீக்கிரமே வேலை தரப்படாவிடின், அவர்கள் சமுதாயத்திற்கே ஒரு பெரும் அபாய அறிவிப்பாக மாறுவர்' என்று அவர் காரைக்குடியில் ஒரு தொழில் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், சென்னையில், ஏராளமான தொழில்கள் துவங்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் வற்புறுத்தியிருக்கிறார்.

எல்லைக்குழு நியமிக்க ஆந்திர சர்க்கார் பிரேரணை!

கர்னூல், நவ. 15—

ஆந்திராவிற்கும் இதர மாநிலங்களுக்குமிடையேயுள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு எல்லைக் குழுக்கள் நியமிக்கும்படி இந்திய சர்க்காரைக் கோரி, ஆந்திர சர்க்கார், சட்ட சபையில் பிரரேபணை ஒன்று கொண்டுவருவர்.

நவ. 25-ந் தேதியன்று மாநில புது அமைப்புத் திட்டம் குறித்து சட்ட சபையில் விவாதம் நடைபெறும்போது பிரரேபணை கொண்டுவரப்படும் என்று தெரிய வருகிறது.

சென்னை மாநிலத்தில் செங்கற்பட்டு, வட ஆற்காடு, ஒசூர் ஆகிய இடங்களிலும், மைசூரில் கோலார் தங்க வயலிலும், மத்திய பிரதேசத்தில் சர்தா, பஸ்தா இடங்களிலும், ஒரிசாவில் பர்லாகிமிடி, கோரபட் ஆகிய இடங்களிலும் தெலுங்கு பெருவாரியாகப் பேசப்படும் பிரதேசங்கள் பற்றி இப்பிரரேபணையில் குறிப்புத் தரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

தென்னேட்டி விசுவநாதத்திற்கு கருப்புக் கொடி

ஐதராபாத், நவ. 15—

விசால ஆந்திரம் அமைவதற்குத் தெலிங்கானா மக்களின் ஆதரவைத் திரட்டும் பொருட்டு தென்னேட்டி விசுவநாதம் இன்று இங்கு வந்து சேர்ந்த போது, விமானத்திலிருந்து அவர் இறங்கியதும் சில மாணவர்கள் கூடி, கருப்புக் கொடி காட்டி 'திரும்பிப்போ' என்று குரல் எழுப்பியதாகக் கூறப்படுகிறது.

சேலம் அருகே நில நடுக்கம்

வெங்கடசமுத்திரம், நவ 14—

சேலம் மாவட்டம் பொம்மிடியை அடுத்த வெங்கடசமுத்திரத்தில் நேற்று முற்பகல் 11-15 மணிக்கு பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. அது சுமார் 5 விநாடிகள் நீடித்ததாம். வீடுகளும் சாமான்களும் அதிர்ந்தன என்றும் மக்கள் பீதியுற்று வெளியே ஓடி வந்தனர் என்றும் கூறப்படுகிறது.

சென்னை சட்ட சபை

சென்னை, நவ. 15—

சென்னை சட்டசபையின் கூட்டம் வரும் நவ. 21-ந் தேதியன்று துவங்கும் என்றும், அன்று, மாநில புனரமைப்புக் குழு பற்றிய விவாதம் நடைபெறும் என்றும், தெரிய வருகிறது.

மதமாற்ற விவகார எதிரொலி

ஆரிய சமாஜத்தினர் கிறித்துவ மிஷனுடன் மோதல்

வட நாட்டு கிராமத்தில் ஒன்பது பேர் கைது

பாட்னா, நவ. 14—

கிராமம் ஒன்றில் உள்ள கிறித்துவ 'மிஷன்' ஒன்றிடம், அங்குள்ள ஆரிய சமாஜத்தவர் கொண்டுள்ள முன்பகை காரணமாக, கடந்த அக்டோபர் 5-ந் தேதியன்று கயா மாவட்டம் பக்ரிபர்வான் வட்டம் மதகுல்னி கிராமத்தில் இரு சாராருக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறது. அதனை ஒட்டி இப்போது, ஒன்பது பேர் வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

ஒரு தாழ்த்தப்பட்டவர் 1944-ல் கிறித்துவ மதத்தைத் தழுவினார். பின் அவர் மீண்டும், கடந்த ஆண்டில், ஆரிய சமாஜத்தில் சேர்ந்தாராம். பின்னர் மீண்டும் அவர் இந்த ஆண்டு கிறித்துவ மதத்தைத் தழுவியதினால் கோபங்கொண்ட ஆரிய சமாஜத்தினர், கிராமத்தில் உள்ள கிறித்துவ 'மிஷ'னுடன் மோதிக் கொண்டனராம். மேலும் கிறித்துவ மிஷனுக்குச் சொந்தமான ஒரு சிறு நிலம் குறித்தும் ஆரிய சமாஜத்தினர் தகராறு கிளப்புவதாகக் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம்

18-12-55-ல் குடந்தையில் கூடும்

★

குறிப்பு: பொதுக் குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் மாநில மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணமாக ரூ. 10 செலுத்த வேண்டும் என்பது சென்ற பொதுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவு. அந்தக் கடமையை நிறைவேற்றிவைக்க வேண்டியது பொதுக் குழு உறுப்பினரின் நீங்காப் பொறுப்பாகும். அந்தக் கடமையைச் செய்யத் தவறும் பொதுக் குழு உறுப்பினருக்குப் பொதுக் குழுக் கூட்ட அழைப்போ—அனுமதியோ வழங்கப்படமாட்டாது என்பது நினைவுறுத்தப்படுகிறது.

'அறிவகம்'
16-11-'55

—தி.மு.க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேவிகுளம், பீர்மேடு பற்றி விவாதிக்க தேதி நிர்ணயம்

தேபர் தரும் தகவல்

மீனம்பாக்கம், நவ. 15—

தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் குறித்து இறுதி முடிவு மேற்கொள்ளப்படுமுன், சென்னை—திரு-கொச்சி சர்க்கார்களின் பிரதிநிதிகளை, காங்கிரஸ் உயர்தரக் குழு சந்தித்துப் பேசுவதற்கான நாள் சீக்கிரமே குறிக்கப்படும் என்று இங்கு வந்த காங்கிரஸ் தலைவர் தேபர் தெரிவித்திருக்கிறார்.

எம். எஸ். பி. சோலை (நாடார்) மறைவு

11—11—55 இரவு 7½ மணிக்கு திண்டுக்கல் பிரபல வியாபாரியும், தி. மு. கழக இயக்க அனுதாபியுமான தோழர் எம்.எஸ்.பி. சோலை (நாடார்) அவர்கள், மதுரை மாவட்டம் டாக்டர் திரு. வடமலையான் மருத்துவ மனையில் இயற்கையெய்தினார். அன்றே அவரது உடலம் திண்டுக்கல் கொண்டுவரப்பட்டு, மறுநாள் மாலை 2½ மணியளவில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு காந்தி மைதானத்தில், திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில், பல கட்சித் தோழர்களும் கலந்துகொண்டு அன்னாரது சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

திரு. எம். எஸ். பி. சோலை (நாடார்) அவர்களை இழந்து தவிக்கும் அன்னாரது உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். (ஆ-ர்)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16–11–'55 புதன்

தமிழுக்குத் தடை விதிக்காதே

★

சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின் இந்தியத் துணைக் கண்டத்தைக் காண வருகிறார். அவருக்கு அன்பழைப்பு விடுத்த இந்தியப் பேரரசு, மார்ஷலுக்கு மகத்தான வரவேற்பு வழங்கத் துடியாகத் துடித்துக்கொண்டுஇருக்கிறது.

இந்தியப் பேரரசின் பிரதமர் மோதிலால் மைந்தர் சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்த பொழுது, அந்த நாடு அவரை நன்கு உபசரித்து பாராட்டிப் புகழ்ந்தது. 'ராஜோபசாரம்' என்ற சொற்றொடரிலேயே, நடைபெற்ற உபசாரத்தின் விரிவு முழுதும் அடங்கிவிட்டது.

அவ்வுபசாரத்தைத் தோற்கடிக்கும் நிலையில், டெல்லி ஆதிபத்தியம், மார்ஷலுக்குச் செய்யவிருக்கும் பாராட்டும் விருந்தும் அமைந்திருக்கும் என்பதில் புதுமை இல்லை. அந்தச் சாதாரணமான செயலைக்கூடவா இந்தியப் பேரரசால் செய்ய முடியாது?

மார்ஷல் புல்கானினுக்கு இந்தியப் பேரரசு, தனது சார்பில் கொடுக்க இருக்கும் வரவேற்பில், அப்பேரரசின் ஆட்சி மொழியான இந்தி மொழி தான் அரியாசனத்து அமர்ந்திருக்கும்; அதில் வியப்புக்குரியது எதுமில்லை.

அதுபோன்றே, மற்ற மாநிலங்களின் சார்பில் தரப்படும் வரவேற்பிலும் அந்தந்த மாநிலங்களில் விரிவாக வழங்கப்பெறும் மொழிகள்தான் இடம் பெற்றிருக்க வேண்டும். இதுதான் நீதியும் நேர்மையும் ஆகும்.

சிறப்புக்குரிய ஒரு விருந்தினரான மார்ஷலை தங்கள் தங்கள் மொழியினல்தான் பாராட்டிப் புகழ வேண்டும் என ஒவ்வொரு மாநிலத்தாரும் விழைவர். அவ்விழைவு வரவேற்கத்தக்கது — பாராட்டத்தக்கது. அப்போக்கில் நியாயவிரோதம் எதுவும் இருப்பதாக வெள்ளறிவு படைத்தவரும் விளம்பத் துணியார்.

ஒவ்வொரு மாநிலத்தாரும், தங்கள் தங்கள் மொழியில் புல்கானினைப் பாராட்டவேண்டும் என நினைப்பதும், அந்த நினைப்பில் தவறு எதுவும் இல்லாது இருப்பதும் இருக்கட்டும். மாநிலத்தார்களின் மனப்போக்கிற்கு இந்திய அரசியல் சட்டமும், பண்டித நேரு போன்ற அமைச்சர்களின் சொற்களும் அரணாக இருந்து வந்திருக்கின்றனவா, முரணாகச் சென்றிருக்கின்றனவா என்று ஆராயவேண்டியது முக்கியமாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் வழங்கும் மொழிகளில் பதினென்கு மொழிகளை 'தேசிய' மொழிகள் என, இந்திய அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டுள்ளது. அக்குறிப்பிட்ட விதியில், ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள தேசிய மொழிகளில், ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது—அல்லது சிறந்தது என ஏற்பாடு கிடையாது.

இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக இந்தி மொழி ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது போன்றே, மற்றப் பதின்மூன்று மொழிகளுக்கும், அது அது வழங்கப்பெறும் நிலப்பரப்புகளில், ஆட்சி மொழிகளாக அரசோச்ச உரிமை உண்டு. இதைத் தடுக்கும் வகையிலோ கெடுக்கும் முறையிலோ இந்தியப் பேரரசு நடந்துகொள்ளக் கூடாது. அது, அரசியல் சட்ட விதிக்கு முரண்பாடு உடையதுமாகும்.

தேசிய மொழிகள் பற்றியுள்ள இவ்வரசியல் சட்ட விதியை ஆணித்தரமாக ஆதரித்துப் பேசிவருவதில் பிரதமர் பண்டித நேருவிற்கு முதலிடமுண்டு. அவரைப் பின்பற்றி, மற்ற மாநில அமைச்சர்களும், அதே பல்லவியைப் பாடியும் வருகின்றனர்.

வடநாட்டு இந்தி மொழி வெறியர்களும் இவ்விதியை வானளாவப் புகழ்ந்து வருகின்றனர். சட்டஎளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால், ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பிற ஆட்சி மொழிகளின் மீது இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தாது என விதண்டாவாதமும்செய்து வருகின்றனர்.

ஆட்சி மொழிகளென அரசியல் சட்டத்தால் ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ள பதினென்கு மொழிகளுக்குள் உயர்வு தாழ்வு துளியும் கிடையாது எனக் கூறிவரப்பட்ட போதிலும், இந்தியப்பேரரசின் நடைமுறை செயல், அரசியல் சட்டத்திற்கு அரண் செய்வதாக அமையவில்லை. துறைகள் அனைத்திலும் மற்ற 'தேசிய' மொழிகளைத் தரைமட்டமாக்கிவிட்டு, அக்கொடுஞ் செயலில் தேசிய மொழிகளில் ஒன்றே ஒன்றுன இந்தி மொழியை அரச பீடத்தமர்த்துவதையே பெருந்தொழிலாகக் கையாளப்பட்டு வருகிறது இந்தியப் பேரரசாலும்—பண்டித நேரு உள்ளிட்ட முக்கியஸ்தர்களாலும்!

இந்தியத் துணைக் கண்டத்திற்கு புல்கானின் வருகின்றபொழுது, அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பு இதழ்கள் இந்தி மொழியிலாவது அல்லது ரஷ்ய மொழியிலாவது மட்டுமே இருக்க வேண்டும் என இந்தியப் பேரரசு கண்டிப்பான உத்தரவு ஒன்று போட்டிருக்கிறது. இக்கடுமையான கட்டளையின் உட்பொருள் என்ன என்பது ஆராயத் தக்கது ஆகும்.

உலக அரங்கில் இந்தி மொழிக்கு இடம் தேடித் தருவதில் இந்தியப் பேரரசு காட்டி வரும் ஆர்வத்தில் நியாயமிருப்பதாகவே வைத்துக் கொள்ளுவோம். ஆங்கில மொழியின் மூலம் மார்ஷலைப் பாராட்டக்கூடாது என இந்தியப் பேரரசு கருதுவதுங்கூட நியாயமானதாக இருக்கலாம். ஆனால் சென்னைக்கு வருகிற புல்கானினை, சென்னையில் வழங்கப் பெறுவதும், 'தேசிய' மொழிகளில் ஒன்றென சட்டத்தின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதுமான கன்னித் தமிழால் பாராட்டக்கூடாது எனக் கட்டளையிடுவது, எவ்வாறு நியாயமானதாகும்?—எந்த வகை நியாயத்தைச் சேர்ந்ததாகும்?

ஆந்திர மொழியிலும்தான் கூடாது! வங்க மொழிக்குந்தான் அவ்வுரிமை மறுக்கப்படுகிறது!

ஆந்திர மொழியில் தரப்படும பாராட்டிதழ், புல்கானின் செவிகளில் புகக் கூடாதாம்! இந்தியப் பேரரசு, அரசியல் சட்டத்தையும் அலட்சியப் படுத்திவிட்டு குறுக்குச் சுவர் எழுப்பிவிட்டிருக்கிறது.

இரவிந்திரநாதர் பண்ணமைத்த வங்காளம் மார்ஷலின் காதுகளில் நுழைய விடாமல் தடுக்கப் போகிறதாம், இந்தியப் பேரரசு! தாக்கிதுபோட்டு விட்டிருக்கிறது!

நயத்தையும், அணி அழகையும் ஒருங்கே இழைத்துத் தந்துள்ளதாக, தமிழ் அறியாத தக்கவர்களும், இருக்குமிடம்கருதி, கம்பர் வளர்த்த தமிழ் பற்றிப் பேசுகிறார்களே, அந்தத் தமிழாலும் சோவியத் பிரதமரைப் பாடக் கூடாது எனப் பெருமிதத்துடன் ஆணையிடுகிறது இந்தியப் பேரரசு!

கம்பர் காப்பாளர்களுக்குக் கோபம் வரவேண்டும்—வருமா?

பாரதியார் பாட்டை, முன்பு ஒருநாள் ஏகாதிபத்தியம் தடை விதித்தது என்பதற்காக குருதி கொதிப்பேறி, களம் அமைத்தக் காங்கிரஸ் தமிழர்களுக்கு, பாரதியார் ஏற்றிப் போற்றிய மூலத் தமிழ் மொழிக்கே முக்காடு போட வேண்டும் என, டில்லி ஆதிபத்தியம் பொல்லாங்கு பேசி இருப்பது கண்டு சீற்றம் பிறக்க வேண்டும்—தட்டிக்கேட்க வேண்டும்—'தகுமா! இந்தத் தப்பிலித்தனம்?' என்று.

சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின் செவிகளில் தமிழ் நுழைந்தால்—ஆந்திரம் புகுந்தால்—வங்கம் ஊடுருவினல், பூரிப்பிழந்து புலி குணமா பெற்றிடுவார், அப்பெருங் குணத்தார்? கூறட்டும் விளக்கம், இந்த இந்தி வெறிக்குணத்தார்!

அரசியல் சட்டப்படி ஒப்புதலும் பாதுகாப்பும், அலகாபாத் பண்டிதரின் பசப்பு மொழியும், தமிழை வளர்க்கவோ,வளர்க்க முடியாமல் போனாலும் அழிய விடாமல் காக்கவோ காதொடிந்த ஊசியளவும் பயன்படப் போவது கிடையாது—மூக்காலும் கிடையாது. தமிழை அழிக்கவே உதவும்—உதவியும வருகிறது.

மொழி பற்றிய அரசியல் சட்ட விதி, இந்தி ஆதிக்கத்தை மெள்ள மெள்ளப் பெருக்க ஒரு புகல்! அதைக் காட்டி ஆறுதல் கூறும் பிரதமர் பண்டிதரின் சாகச மொழி, இந்தியை ஆழமாக வேர்விடச் செய்ய மேற்கொள்ளப்படும் வெறும் செப்பிடுவித்தையாகும்!

புல்கானின் அவர்களை 'இந்தி மொழியால் பாராட்டு; தமிழில் பாராட்டாதே' எனும் இந்தியப் பேரரசின் கட்டளை, எதிர்காலத்தில் பிற மொழிகளுக்கு வரவிருக்கும பெருங்கேட்டினை — சீரழிவை விளக்கமாகக் குறிப்பிடும் முன்னறிவிப்பாகும். தமிழும் அச்சீரழிவுப் பட்டியலில் ஒன்றாகும். காங்கிரஸ் தமிழர்கள் கண்விழிக்க வேண்டும்—மண்டியிடாது — முணுமுணுக்காது—தலை நிமிர்ந்து இந்தியப் பேரரசை தட்டிக் கேட்கவேண்டும், 'தமிழுக்குத் தடை விதிக்காதே' என்று.

தாழ்த்தப்பட்டோருக்கு தனி நிறுவனங்கள்

தொடர்ந்து நீடிக்க வேண்டுமா?

டாக்டர் இராசேந்திரர் கருத்து

"ஒரு சமூகத்தினருக்காக நிறுவனங்கள் இருப்பது முற்காலத்தில் அவசியமாக இருந்தது. படிப்பிற்கும் அல்லது வேறு காரியங்களுக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இதர கல்வி நிறுவனங்களில் இடம் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. ஆனல், இப்பொழுது காலம் மாறிவிட்டது இனி இத்தகைய தனி நிறுவனங்கள் இருக்கவேண்டுமா என்பதைச் சிந்திக்கவேண்டும். தற்போதைய சட்டப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பு அல்லது வேறு வகுப்பு என்ற பெயரால் பொது நிறுவனங்களில் இடம் மறுப்பது குற்றமாகும். இவ்விதம் நான் சொல்வதால் இப்பொழுதுள்ள இத்தகைய நிறுவனங்களை மூடவேண்டுமென்பதல்ல. ஆனல் இந்த நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டவரை மட்டும் சேர்த்துக்கொள்ளாமல் மற்ற வகுப்பினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். தக்கர்பாபா வித்தியாலயத்தில் அவ்விதம் செய்யப்படுகிறது என்று கேட்க நான் மகிழ்கிறேன் எல்லா சமூக மாணவர்களும் அவ்விதம் சேர்ந்திருந்து நெருங்கிப் பழகினல் வேற்றுமைகள் மறையும்.

"தக்கர்பாபா வித்தியாலயம்நல்ல சேவை செய்து வந்தபோதிலும் நிதிக் கஷ்டம் இருப்பதாக அறிகிறேன். இவ்விதக் கஷ்டம் இது போன்ற நிறுவனங்களுக்கு இருக்கலாகாது. ஆகையால், பொது மக்களையும், சர்க்காரையும், தக்கர் பாபா வித்தியாலயத்திற்கு ஆதரவு கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று, குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத் வித்தியாலய விழாவில் குறிப்பிட்டிருக்கிறார்.

விவசாயத் துறைப்பட்டம்பெற்றோர்

இரண்டாம் திட்டத்திற்கு 5,000 பேர் தேவையாம்

புதுடில்லி, நவ. 15—

சமூக நலத் திட்டத்தை அமுல் செய்வதற்காக சுமார் 5,000 விவசாயத்துறைப் பட்டதாரிகள் தேவைப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம். இரண்டாம் திட்ட காலத்தில், சமூக நலத் திட்டப் பிரதேசத்தில் இந்த பட்டதாரிகள் அதிகாரிகளாக நியமிக்கப்படுவர் என்று தெரியவருகிறது.

இந்தப் பட்டதாரிகளை இப்போதுள்ள கல்லூரிகளில் இடவசதிகளைப் பெருக்குவதின் மூலம் உற்பத்தி செய்ய திட்டமிடப்படுகிறதாம். மேலும் மூன்று புதிய விவசாயக் கல்லூரிகளைத் திறக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறதாம்.

இதற்கிடையில் சில மாநில சர்க்கார்கள் புதிய விவசாயக் கல்லூரிகளைத் திறப்பதற்காக, மத்திய சர்க்காரிடம் அனுமதி கோரியிருப்பதாகவும் தெரியவருகிறது.

உயர்தர போலீஸ் அதிகாரி தேவிகுளம் செல்லவில்லை

சர்க்கார் மறுப்பு

சென்னை, நவ. 13—

சென்னை உயர்தர போலீஸ் அதிகாரி ஒருவர் தேவிகுளம், பீர்மேடு வட்டங்களுக்குச் சென்று தகவல் சேகரித்ததாகக் கூறி சில பத்திரிகைகள் வெளியிட்டிருந்த செய்தியை மறுத்து சென்னை சர்க்கார் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

அந்தச் செய்தி ஆதாரமற்றது என்றும், தொடர்புடைய அதிகாரி அங்கு செல்லவே இல்லை என்றும் இந்த நேரத்தில் அப்படித் தவறுன செய்திகள் வெளிவருவது தப்பெண்ணத்தை உண்டாக்கக்கூடியது என்றும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

சென்னை தப்பறியும் இலாக்கா உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அருள் என்பார், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளுக்கு கடந்த கிழமை சென்று அந்தப் பகுதிகள் தமிழகத்துடன் இணைவதற்குத் தேவையான ஆதாரவு திரட்டும் வேலையிலீடுபட்டதாக, முன்னர் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

ராஜாராம் மோகன்ராய் வெற்றி பெற்றார?

பண்டாரா, நவ. 14—

மதுர்கா என்ற இடத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தன் கணவர் இறந்துவிட்டதும் அவருடனேயே 'உடன்கட்டை' ஏறிய தாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

தனது கணவன் உடல் எரிந்துகொண்டிருக்கும்போது, மஞ்சள் நிற சேலை அணிந்துகொண்டு கழுத்தில் ஒரு மாலையுடன் தோன்றி மயானத்தில் கூடியிருந்தவர்களிடம் தான் உடன்கட்டை ஏறப்போவதாகத் தெரிவித்து விட்டு நெருப்பில் குதித்துவிட்டாராம்.

அந்தப் பெண்ணை எவரும் தடுத்து நிறுத்தியதாகத் தெரியவில்லை.

நெருப்பில் விழுந்த அந்தப் பெண், துடித்துத் துடித்து அலறினாராம். ஆனல் அந்த அலறலை விட அதிக உரத்த தொனியில் தாரை, தப்பட்டைகள் முழங்கினவாம்; குருக்கள்மார் வேதங்கள் ஓதினராம். சில நிமிட நேரத்தில் அந்தப் பெண் சாம்பலானாராம்.

சென்னை வட்டத்தில் அஞ்சல் நிலையங்கள்

அதிகரிப்பது குறித்து தகவல்

சென்னை, நவ. 13—

ஆயிரம் பேர் கொண்ட கிராமத்திற்கு அஞ்சல் நிலையம், 5,000 பேர் கொண்ட ஊருக்கு தந்தி வசதி மற்றும் வட்டங்களில் டெலிபோன் வசதி இவை எல்லாம் செய்து தர இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் திட்டமிடப்பட்டிருப்பதாக, சென்னை வட்டார அஞ்சல் துறை தலைமை அலுவலகத்தவர் தகவல் தருகின்றனர்.

இதன்படி, இன்னும் 5 ஆண்டுக்குள்ளாக சென்னை வட்டத்தில் 500 புதிய அஞ்சல் நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

சென்னை மவுண்ட் ரோடில், சென்னை அஞ்சல் நிலைய தலைமை நிலையத்திற்காக ரூ. 17,00,000 செலவில் கட்டப்பட்டுவரும் புதிய மாளிகை இப்போதைய திட்டப்படி 1957-ல், தயாராகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

கண்டறியப் போகிறர்களாம் !

சென்னை, நவ 15—

காங்கிரஸ் பெரும்பான்மையாயுள்ள காஞ்சீபுரம் நகர சபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோற்ற காரணமென்ன? மதுரை தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்ற காரணம் என்ன? —இது சம்பந்தமாக விவரங்கள் அனுப்பும்படி கேட்டிருப்பதாக த. நா. கா. கமிட்டி தலைவர் பி. கக்கன் தெரிவித்துள்ளார்.

வேறு சில ஊர்களில் முனிசிபல் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்கள் தோல்வியுற்றது பற்றியும் சம்பந்தப்பட்ட மாவட்ட, நகர காங்கிரஸ் கமிட்டிகளிடம் விவரம் கேட்பதென த. நா. கா. காரியக் கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவரங்கள் கிடைத்த பிறகு கட்டுப்பாட்டை மீறிய காங்கிரஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

காஞ்சீபுரம் சேர்மன் தேர்தலில் சுயேச்சை அபேட்சகர் பெருமாள் நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆறு காங்கிரஸ்காரர்கள் சுயேச்சை அபேட்சகருக்கு வாக்குகள் அளித்திருக்க வேண்டுமென நம்பப்படுகிறதாம்.

மதுரையில் நான்கு காங்கிரஸ்காரர்கள், எதிராக வாக்குகள் அளித்தனராம்.

சாகும்வரை பட்டினிப்போர்

பம்பாயுடன் கூடிய சம்யுக்த மராட்டியத்திற்காகத் தூளுரை

பம்பாய், நவ 14—

மராட்டியருக்கு பம்பாய் தலைநகரமாகக் கிடைக்காவிடின் 'உண்ணாவிரதம்' மேற்கொள்ளப்போவதாயும், சாகும்வரைதான் அந்த விரதத்தைக் கடைப்பிடிக்கவும் தயங்கமாட்டார் எனவும் என். பி. பாருலேகர் என்பார் தெரிவித்திருக்கிறார்.

இதர அமைதியான ஜனநாயக வழிகள் அத்தனையும் பலன் தராத போதுதான், தான் இவ்வாறு பட்டினிப்போர் தொடுக்கப் போவதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் செயற் குழுவினர் பம்பாய் நகரைத் தனி மாநிலமாக்க வேண்டும் என்று செய்துள்ள முடிவை மராட்டியப் பிரதேச காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் அது ஏற்கனவே தெரிவித்திருக்கிறது. பம்பாயை ஒரு இரு மொழி மாநிலமாக வேண்டுமானால் ஆக்குவதற்குத் தான் சம்மதிப்பதாயும் கூறப்படுகிறது

மராட்டிய பிரதேச காங்கிரஸ் கட்சிக் கூட்டம் வரும் 16, 17-ந் தேதிகளில், பூனாவில் நடைபெறவிருக்கிறது என்றும், அங்கு அதிகார பூர்வமாக, பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் வேண்டும்; இன்றேல், எல்லா மராட்டிய குஜராத்தி பகுதிகளடங்கிய இரு மொழி பம்பாய் மாநிலம் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் கூறப்படுகிறது.

சங்கர்ராவ் தேவ் போன்ற தலைவர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுவின் முடிவு கண்டு மிகவும் மனம்உடைந்துபோயிருப்பதாகக் கூறப்படுகிறது.

எப்படி இருப்பினும், மராட்டியர், சம்யுக்த மராட்டியம் என்ற தங்களின் உயிர் இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள எந்த தியாகமும் செய்யத் தயாராயிருப்பதாகவும் மேற்பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

மதுவிலக்கு விசாரணைக் குழு சிபாரிசுகள்

திட்டக் குழுவின் நிலை என்ன?

மதுவிலக்கு விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் பற்றி திட்டக் குழு இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை எனத் தெரிகிறது.

1958-ம் ஆண்டிற்குள் இந்தியா முழுமையிலும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென அக்குழு சிபாரிசு செய்திருப்பது நினைவிலிருக்கலாம். மாநில சர்க்கார்களின் கருத்தை அறிவதற்கு அந்த அறிக்கையின் நகல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவருவதால் ஏற்படக்கூடிய வருமான நஷ்டம் ஒருபுறமிருக்க, அதை வெற்றிகரமாக அமுல் நடத்துவதற்கு மாநில சர்க்கார்களுக்குள்ள சக்தி ஆகிய அம்சங்களைப் பொறுத்தே மேற்படி சிபாரிசுகளின் அமுல் இருக்கும் எனக் கூறப்படுகிறது.

மந்திரியின் வெறுப்பு

திருவனந்தபுரம், நவ. 12—

மந்திரியாயிருந்துகொண்டு காகிதங்களில் கையெழுத்திடுவதையே பெரும் வேலையாகக் கொண்டிருப்பதை திரு-கொச்சி முதன் மந்திரி கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

ஒரு பெரும் காகிதக் குவியலுக்கிடையில் உட்கார்ந்துகொண்டிருந்த அவர் 'இது நிறுத்தப்பட வேண்டும். நான் எப்படி இந்த மாதிரி வழக்கமான வேலைகளில் ஆர்வமுடன் ஈடுபட முடியும்?' என்று அவர் நிருபர்களிடம் தெரிவித்தாராம்.

ஆசிரியர்களை நியமிப்பது, மாற்றுவது குறித்த தஸ்தாவேஜுகளை அவர் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

அன்பளிப்பு

திருப்பாலக்குடியில், 20-3-55ல் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் மூலம், உள்ளிக்கோட்டை தி. மு. கழகச் சார்பில், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்குக் கொடுக்கப்பட்ட ரூ. 2 வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

வேடிக்கை!

திருவனந்தபுரம், நவ. 12—

தென்னாட்டு பல்கலைக் கழகங்களுக்கிடையில் நடைபெறும் 'வாலிபால்' விளையாட்டுக்களின் இறுதிப் பந்தயம் இங்கு சென்னை பல்கலைக் கழக மாணவர்களும் ஆந்திர பல்கலைக் கழக மாணவர்களும் விளையாடிக்கொண்டிருந்தனர். களைப்புற்ற சென்னை ஆட்டக்காரர்கள் தண்ணீர் கேட்டனர்; தரப்பட்டது. ஆனால், திரு-கொச்சி தண்ணீர், சென்னைக்குத் தரப்படக்கூடாது என்று கூறுகிற கூட்டத்தைச் சேர்ந்தாரோ என்னவோ, பார்வையாளர் ஒருவர், 'சென்னைக்குத் தண்ணீர் கிடையாது' என்று கத்தினாராம்.

திருமணங்கள்

8—11—55 இரவு, நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் அம்பிகாபுரம் தோழர் கா. பொன்னுசாமி—தோழியர் புஷ்பா திருமணம், திருத்திய முறையில் சிறப்பாக நடைபெற்றது. தந்தி மூலம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய நண்பர்கட்கும், மற்றோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

5—11—55 காலை 9 மணிக்கு, சென்னை-திருவொற்றியூரில் தோழர் ஆர். சமரசம் தலைமையில், தோழர் டி. கே. பழனிசாமி—தோழியர் புஷ்பம் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் எம். கணபதி, டி. சண்முகம் எம். எல். ஏ., கே. ஏ. மதியழகன், கே. கே. நீலமேகம் ஆகியோர் பேசினர். பின்னர், மணமக்களுக்குத் திருவொற்றியூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் வாழ்த்துரை வாசித்தளிக்கப்பட்டது. இறுதியில் அண்ணா அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

பெயர் சூட்டல்

5—11—55 காலையில், சென்னை திருவொற்றியூரில் நடைபெற்ற திருமண விழாவின்போது திருவொற்றியூர் தி. மு. கிளைக் கழகத் தோழர் முத்துசாமி அவர்களின் குழந்தைக்கு அண்ணா அவர்களால் 'வீரமணி' என பெயரிடப்பட்டது.

மறைவு

சத்திரப்பட்டி தி. மு. கழகத் தோழர் பி. குப்புசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் சங்கரவடிவு அம்மையார் அவர்கள் மறைவுக்கு கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அஞ்சல் துறை வளர்ச்சி

அமைச்சர் தரும் விளக்கம்

புதுடில்லி, நவ 12—

இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்குமிடையே நேரடியாகப் பிரயாணிகளையும் சாமான்களையும் அனுப்ப வசதியாக இரு நாடுகளிடையேயும் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டிருப்பது குறித்து மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி ஜகஜீவன்ராம் குறிப்பிட்டிருக்கிறார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியா புதிதாக சர்வதேச விமானப் போக்குவரத்தை நடத்தவும் முடியக்கூடும் என்றும் அவர் சூசகமாக அறிவித்திருக்கிறாராம்.

இரண்டாம் திட்டக் காலத்தில் மேலும் 20,000 தபால் நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 15,000 அஞ்சல் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டன என்றும், இரண்டாம் திட்ட முடிவின்போது இந்தியாவில் 76,000 அலுவலகங்கள் இருக்கும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

புதிய விமானங்கள் வாங்கவும் விமானக் கூடங்கள் அமைக்கவும் ரூ. 18 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாயும், தற்போதுள்ள 'கான்ஸ்டலேஷன்' விமானங்களை மாற்றவும் ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாயும் ஜகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாம் திட்டக் காலத்தில் இந்தியாவில் ட்ரங்க் டெலிபோன் முறையை மாற்றி அமைக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாகவும், 12 மண்டல நிலையங்களும் 65 மாவட்ட நிலையங்களும் ஏற்படும் என்றும் பம்பாய்—டில்லி, கல்கத்தா—டில்லி, அமிர்தசரஸ்—அம்பாலா—சிம்லா, பம்பாய்—சென்னை, திருச்சி—கோவை இடையே நீண்ட தூர ட்ரங் 'கேபிள்'கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாயும், தற்கால இயந்திர சாதனங்களைக் கொண்ட 2,000 தந்தி நிலையங்கள் ஏற்படும் என்றும் ஜகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

இந்திய டெலிபோன் தொழிற்சாலையில் ஆண்டுதோறும் 30,000 எக்சேஞ்சு 'லைன்'களும் 50,000 டெலிபோன் சாதனங்களும் உற்பத்தியாகின்றன. இரண்டாம் திட்டத்தில் இவை முறையே 40,000-க்கும் 60,000-க்கும் அதிகரிக்கும் என்றும் தனிப்பட்டவர்களிடமிருந்து விமான 'கம்பெனி'களை சர்க்கார் மேற்கொண்டதற்காக ரூ. 5 கோடி நஷ்டஈடு கொடுக்கப்பட்டது; தற்போதுள்ள தொழில் நிலையங்களை விரிவாக்குவதற்காக ரூ. 2 கோடி செலவிடப்பட்டது; 'டகோடா' விமானங்களை மாற்றியமைக்கவும் விமான 'கார்ப்பரேஷன்' ஊழியர்களுக்கு வீட்டு வசதி அளிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டது என்ற தகவலையும் செய்திப் போக்குவரத்து மந்திரி ஜகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

உணர்த்த வேண்டியவரே உணர்த்துகிறார்!

மொழிச் சிக்கல் சம்பந்தமாகக் கண்டியில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் ஒரு பௌத்தத் துறவி தமிழரையும், தமிழ் மொழியையும் இழிவாகவும், அவதூறாகவும் பேசியது ஒரு சிங்கள வாலிபப் பௌத்தத் துறவிக்கே பிடிக்கவில்லையாம். அதை ஆட்சேபிக்கும் வகையில் அவர் தமது தலை முடியை மொட்டையடித்துள்ளார்.

பௌத்த குரு அவ்வாறு பேசியிருக்கக் கூடாதென்றும், அது பௌத்த சமயத்திற்கு இழுக்கை உண்டுபண்ணக் கூடியதென்றும், அந்த வேதனை காரணமாகவே தாம் தலையை மொட்டையடித்துக் கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதுவை அமைச்சர்கள் வருகை

புதுவை மாநிலத்தின் தலைமை அமைச்சர் ஆர். எம் ஏ எஸ். பக்கிரிசாமி அவர்களும், மற்ற அமைச்சர்கள் சோ. தட்சணாமூர்த்தி, சந்திரசேகரன், குபேர், தியாகராசன் ஆகியோர்களும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு 6-11-55 அன்று காலையில் வந்து சிறப்பித்தார்கள். பாடசாலையின் பழைய மாணவர் திரு சோ. தட்சணாமூர்த்தி அவர்கள் புதுவை மாநிலத்தின் நலத்துறை அமைச்சராக வந்துள்ளதைப் பாராட்டுவதற்குப் பாடசாலையார் நடத்திய பாராட்டு வாழ்த்துக் கூட்டத்தை முன்னிட்டு அவர்கள் யாவரும் வந்தனர். பாடசாலை மாணவர் இல்லம், தொழிற்சாலை ஆகியவைகளில் படிக்கும் 800 மாணவர்களையும் அமைச்சர்கள் பார்த்தனர்.

தலைவர்களும் விழாக் கொண்பவர்களும் பாடசாலை, மாணவர் இல்லம், தொழிற்சாலை ஆகிய எல்லாவற்றையும் பார்த்து, மாணவர்களின் உடற்பயிற்சி, அறிவுப் பயிற்சி முதலியனவற்றையும்கண்ட பிறகு, பாராட்டு விழாக் கூட்டம் தவங்கியது.

புதுவை அமைச்சர்கள் பேசிய போது, இந்துமத பாடசாலை, மாணவர்களுக்குப் பெரு நன்மைகள் புரிகிறது என்றும், இதைப் போல பாடசாலை இது ஒன்றுதான் என்றும் சொல்லி இதுமேன்மேல் சிறக்கவேண்டுமெனவாழ்த்தினார்கள். இறுதியில், பாடசாலைச் செயலாளர் திரு வா. தி. மாசிலாமணி அவர்கள் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

மீண்டும் கதாகாலட்சேபம் செய்ய வேண்டுமாம்

கிராமங்களில் கம்ப இராமாயணம் படிக்க வேண்டுமாம்

முதலமைச்சர் காமராசர்தான் பேசியிருக்கிறார்

முன்போல கிராமங்களில் புராணீகர்களின் வாயிலாகக் கம்ப இராமாயண காலட்சேபங்கள் நடைபெற மீண்டும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கம்பன் காவியத் திறமையை நாம் இங்கு புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். வெகு நாளைக்கு முன்பே கிராம மக்கள் கம்பனின் கவி நயத்தைப் புரிந்துகொண்டு பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர்.

வயல்களில் வேலை செய்யும் போதும், நீர் இறைக்கும்போதும், வண்டி ஓட்டும்போதும் கிராமவாசிகள் பாடுவார்கள்.

பெரிய புராணிகர்களின் கம்ப இராமாயணக் காலட்சேபம் மாதக் கணக்கில் நடைபெறும்; இப்போது அது மறைந்துவிட்டது; எனவே, புராணிகர்கள் மீண்டும் கிராமங்களுக்குச் சென்று கம்ப இராமாயணக் காலட்சேபங்கள் செய்ய வேண்டும்

இப்போது கிராமவாசிகள் சினிமா பார்க்கப் போகின்றனர். ஆனால், இந்த முறைமாறி, கம்ப இராமாயணக் கதை கேட்குமாறு மீண்டும் கிராமவாசிகளிடையே முறை ஏற்படுத்த வேண்டும்—என்பதாக, முதன் மந்திரி காமராசர் நேற்று எட்டாவது கம்பர் மாநாட்டைஒட்டி வாணி மகாலில் கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை, நவ. 15—

இன்று முதல் இந்தியாவெங்கும் ஒரு கிழமைக்கு 'கோசம் வந்தன' வாரம் கொண்டாடப்படுமாம்.

கால்நடைக் கண்காட்சிகள் முதலியன முக்கியமான நகரங்களில் எல்லாம் ஏற்பாடு செய்யப்படும்.

பாராட்டு விருந்து

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை பழைய மாணவர் திரு. தி. சோ. தட்சணாமூர்த்தி அவர்கள், புதுவை மாநிலத்திற்கு சுகாதார மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றமை குறித்து, மேற்படி பாடசாலையாரால் 6—11—55-ல் பாராட்டு விருந்து நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். புதுச்சேரி மாநில மந்திரிகள் ஐவர் உட்கார்ந்திருக்கிறார்கள். நடுவில் இருப்பவர் சென்னை வருமான வரி கமிஷனர் திரு. வி. சுந்தரமூர்த்தி அவர்கள்,

சைப்ரஸ் தீவில் கிளர்ச்சி

மாணவர் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

நிகோசியா, நவ 15—

சைப்ரஸ் தீவில் 'விடுதலைக் கிளர்ச்சி, நாளுக்கு நாள் வலுத்து வருவது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பெரிய 'தலைவலி' யாக இருந்துவருகிறதாம். கிளர்ச்சியை அடக்க பிரிட்டிஷார் தங்களிடமுள்ள எல்லா அடக்கு முறைச் சாதனங்களையும் பயன்படுத்தத் தவறுவதில்லை.

ஒருவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து இன்று நகரில் பெரும் கிளர்ச்சி நடைபெற்றிருக்கிறது.

மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாயும், அவர்களைக் கலைப்பதற்கு இராணுவத்தினர் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாயும் கூறப்படுகிறது.

இஸ்ரேல்-எகிப்து தகராறு!

அமெரிக்க சமரசத் திட்டத்தை அரபுலீக் பரிசீலிக்கும்

கெய்ரோ, நவ. 14—

இஸ்ரேல்-எகிப்து தகராறைத் தீர்த்துவைக்க அமெரிக்க வெளிவிவகார மந்திரி டல்லஸ் தெரிவித்த சமரச திட்டம் குறித்து புதன்கிழமையன்று அரபுலீக் ஆலோசிக்கும் என்று லீகின் பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். எல்லை மோதுதல்களைத் தவிர்ப்பதற்கு என்று ஐ.நா பொதுச்செயலாளர் தெரிவித்த திட்டத்தையும் லீக் பரிசீலிக்கும் என்று அவர் கூறியிருக்கிறாராம்.

அரபு லீக், இஸ்ரேல், எகிப்து தகராறு குறித்து அதிகாரபூர்வமாக விவாதிப்பது இதுவே முதன் முறை என்றும், இச்சிக்கலில் எட்டு அரபு நாடுகளும் ஒரேவகையான கொள்கையைப் பின்பற்றும் என்றும் அரபுலீக் பொதுச்செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

44 உயிர்களைகுடித்த விமானவிபத்து

வெடிப்புக் கருவி வைத்த ஒருவர் கைது

டென்வர், நவ. 15—

சில நாட்களுக்கு முன் அமெரிக்காவில் டென்வர் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம் ஏழு நிமிடங்களுக்குள் வெடித்து 44 பேர் கொல்லப்பட்டது நினைவிலிருக்கலாம்.

இதனை ஒட்டி இப்போது கில்பர்ட் என்பார் கைது செய்யப்பட்டிருக்கிறார். கொல்லப்பட்ட 44 பேர்களில் கில்பர்டின் தாயாரும் ஒருவர்.

வெடிப்புக் கருவி ஒன்றை தான் அந்த விமானத்தில் பொருத்தியதாக, கைதான கில்பர்ட் ஒப்புக்கொண்டிருக்கிறாராம்.

இந்தத் தகவலை அமெரிக்க 'அட்டர்னி-ஜெனரல்' தந்திருக்கிறார்.

நடைபெற்ற நாசத்திற்கு கில்பர்ட் மட்டுமே பொறுப்பா அல்லது அதில் வேறு பலருக்கும் தொடர்பு உண்டா என்று நிருபர்கள் கேட்டபோது, இப்போது அது குறித்து வேறு தகவல்கள் எதுவும் தரமுடியாது என்று பதில் தரப்பட்டதாம்.

இரும்பு உருக்குப் பொருள்கள்

மீண்டும் கட்டுப்பாடு

கல்கத்தா, நவ. 15—

இரும்பு உருக்குப் பொருள்களுக்கு மீண்டும் கட்டுப்பாடு விதித்திருப்பதாக சர்க்கார் குறிப்புக் கூறுகிறது.

உத்தரங்கள் போன்ற பல கனரக உருக்குச் சாமான்களுக்கு மீண்டும் கட்டுப்பாடு விதித்தும் இரும்புப் பட்டைகள், கம்பிகள் போன்றவற்றிற்கு தளர்த்தப்பட்ட கட்டுப்பாட்டை மீண்டும் திரும்பப் பெற்றிருப்பதாயும் இந்தியப் பேராசின், இரும்பு உருக்கு கட்டுப்பாடு அதிகாரியின் அலுவலகத்திலிருந்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

தேவைக்கு ஒப்ப 'சப்ளை' நிலை அபிவிருத்தி அடைந்ததும் 1952ல் கட்டுப்பாடுகளை மத்திய சர்க்காரில் நீக்கினார்கள். ஆனால் மத்திய சர்க்கார் பல கட்டுமானங்களை மேற்கொண்டிருப்பதனால் மீண்டும் 'சப்ளை' நிலை மோசமடைந்ததாம். இதுவே மீண்டும் கட்டுப்பாடு விதிப்பதற்கான காரணம் என்றும் கூறப்படுகிறது

இப்போது உடனடியாக 10 இலட்சம் டன் உருக்கு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது என்றும் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இதற்காக பல நாடுகளிடமும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

ரஷ்யா ஏற்கனவே 50,000 டன் உருக்கு 'சப்ளை' செய்ய ஒப்பந்தம் செய்திருப்பதற்கு மேலாக ஒரு இலட்சம் டன் தரும் என்றும் தெரியவருகிறது. மேலும் சீனாவும் 60,000 டன் உருக்கு தரும் என்றும் கூறப்படுகிறது.

பஞ்சாயத்து தலைவர் தற்கொலை!

நாகப்பட்டினம், நவ. 14—

நன்னிலம் வட்டம் பனங்குடி பஞ்சாயத்து போர்டுத் தலைவரான ராஜமாணிக்கம் என்பவர் நஞ்சு உண்டு தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

இவர் மீது பஞ்சாயத்து சபைக்குச் சொந்தமான பணம் 2000 ரூபாயை மோசடி செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டி நடவடிக்கை எடுத்திருந்ததாம் சர்க்கார்.

சுதந்திர வீரர்களுக்கு நினைவாலயம்

மணிபுரியில் எழுப்பப்படும்

இம்பால், நவ. 15—

சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் இந்திய சுதந்திரத்திற்காக வீரப் போர் புரிந்த இந்திய சுதந்திர சேனையின் நினைவாக, மணிபுரியில் இரண்டு நினைவாலயங்கள் நிறுவ ஏற்பாடாகியுள்ளதாம்.

1944 ஏப்ரல் 15-ந் தேதியன்று இந்திய தேசிய இராணுவக் கொடி ஏற்றிய மொய்ராங்கிலும், கடைசிப் போர் நிகழ்த்திய லோக் பச்சிங் மலையிலும் நினைவாலயங்கள் எழுப்பப்படும் என்று கூறப்படுகிறது.

இங்குதான் இம்பால் — சுபாஷ் பிரிகேட் கர்னல் ஷா நவாஸ்கான் தலைமையிலும், காந்தி பிரிகேட் கர்னல் ஜெ கே கியானி தலைமையிலும், ஆஜாத் பிரிகேட் கர்னல் குர்ஜாரா தலைமையிலும் போரிட்டன. மலைப் பகுதிகளில் இன்னும் வீரர்களின் எலும்புகள் காணப்படுகின்றனவாம்.

திருத்தம்

சென்னை 14-11-55 'நம் நாடு' இதழில், 4-வது பக்கம் 3-வது கலம் இரண்டாவது வரியில். 'கு. பாலகிருட்டிணன்' என்றிருக்கும் பெயரை 'க.பாலகிருட்டிணன்' என்று திருத்திப் படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(ஆ-ர்.)

சென்னை வட்டத்தில்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்னை, திரு-கொச்சி, மைசூர். குடகு, புதுவை இவையடங்கிய சென்னை வட்டத்தில் இப்போது மொத்தமாக 9,847 அஞ்சல் நிலயங்கள், தபால் தந்தி நிலயங்கள் 877, டெலிபோன் நிலயங்கள் 105, பொது டெலிபோன் வசதிகள் 491 என்று புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன.

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவ. 17 பவானி
18 மாலை: கிண்டி பொறியியல் கல்லூரி
19 காலை: கோகலே மண்டபம் -சென்னை
20 மாலை: சென்னை 16-வது வட்டம்

மிருகக் காட்சிசாலை நூற்றாண்டு விழா!

ரூ. 1 லட்சத்திற்கு மேல் மீதம்

சென்னை, நவ. 15—

சென்னை நகர சபை மிருகக் காட்சிசாலையின் நூற்றாண்டு விழாவையொட்டி வசூல், நன்கொடை இவற்றின் மூலமாக ரூ. 2 இலட்சம் கிடைத்தாயும், செலவு போக மிச்சமிருப்பது குழந்தைகள் பிரிவு ஏற்படுத்தச் செலவிடப்படும் என்றும், நகர சபை நிர்வாக அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

செலவு, சுமார் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு குறையாமலும், எழுபதாயிரம் ரூபாய்க்கு அதிகமாகாமலும் இருக்கக் கூடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மிருகக் காட்சிசாலையின் நூற்றாண்டு விழா முடிவை ஒட்டி ஒரு தேநீர் விருந்து நடைபெற்றபோதுதான் அதிகாரி இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

நீரில் மூழ்கிய குழந்தையைக்

காப்பாற்றிய குரங்கு

பண்டா, நவ 15—

சித்திரக்கூடத்தில் பயாஸ்வானி நதியில் ஒரு சிறுவன் நழுவி விழுந்துவிட்டான். இதைகண்ட சிறுவனின் தாயார் அலறித் துடித்தாராம். துக்கம் மேலிட்டால் அந்தப் பெண்மணி மயக்கமுற்றுவிட்டாராம்.

ஆனால், திடீரென தண்ணீரில் ஏதோ ஒலி கிளம்பிற்று. ஒரு பெரிய உருவம் தண்ணீரில் விழுந்து மூழ்கும் சிறுவனை நெருங்கி சிறிது நேரத்தில் எப்படியோ துழாவி சிறுவனைத் தூக்கிக் கொண்டு வந்து தாயாரின் முன் நிறுத்தியதாம்.

நினைவிழந்த நிலையிலிருந்த தாயார் ஒரு குரங்குதான் தன் குழந்தையைக் காப்பாற்றியது என்றறிந்தபோது ஆச்சரியமாயிருந்ததாம்.

★

அரபு நாடுகளுக்கு ஆயுதங்கள்

வழங்குவதை ரஷ்யா நிறுத்தாது

ஜினீவா, நவ. 15—

சோவியத் ரஷ்யாவும் அதனைச் சார்ந்த நாடுகளும், எகிப்து சிரியா முதலிய நாடுகளுக்கு ஆயுதங்கள் வழங்க முன்வந்திருப்பதால் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலை குறித்து ஜினீவா நால்வர் மாநாட்டிற்கு வெளியே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றனவாம். சோவியத் ரஷ்யாவும் மற்றும் அதனைச் சார்ந்த நாடுகள் அரபு நாடுகளுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ உறுதி மொழி அளிக்கச் செய்ய இஸ்ரேல் வெளிவிவகார மந்திரியாலும் மேற்கு நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகளாலும் முடியவில்லை. என்று கூறப்படுகிறது.

ரஷ்யத் தலைவர்களுடன் 5 மந்திரிகள் இருப்பர்

டில்லிக்கு 18-ந்தேதியும்சென்னைக்கு 28-ந் தேதியும் வருவர்

சோவியத் பிரதமர் புல்கானின் மற்றும் கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் ஆகியோருடன் சோவியத் மந்திரிகள் ஐந்து பேர் வருவர் என்று கூறப்படுகிறது.

விவசாய மந்திரி மிக்ஹைய்லாவ், உதவி வெளி விவகார மந்திரி க்ரோமிகோ, உதவி வர்த்தக மந்திரி பி. எம். குமிகின், எச். ஆர். ரசுலாவ் என்ற உதவி விவசாய மந்திரி, உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த கலாச்சார உதவி மந்திரி திருமதி ரச்ஹிம்லா பாவா ஆகிய ஐந்து பேர்களும் வருவார்களாம்.

தலைமை நிர்வாக அதிகாரி ஜெனரல் ஐ. ஏ. செராவ் என்பார் தலைமையில் 25 அதிகாரிகளும் ரஷ்யாவிலிருந்து வருவார்கள்.

மாஸ்கோவிலிருந்து புதனன்று கிளம்பும் ரஷ்யத் தலைவர்கள் 18-ந் தேதி வெள்ளியன்று டில்லி வந்து சேர்வார்கள் என்றும், சென்னை நகருக்கு 28-ந் தேதியன்று வருகை தருவார்கள் என்றும் கூறப்படுகிறது.

★

ரஷ்யத் தலைவர்களை வரவேற்க கம்யூனிஸ்டுக் கட்சி கட்டளை

கல்கத்தா, நவ 14—

ரஷ்யப் பிரதமர் புல்கானின் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும்போது, அவர் கலந்துகொள்ளும் பொது விழாக்களில் அரிவாள் சுத்தி சின்னத்துடன் கூடிய கம்யூனிஸ்டு கட்சிக் கொடிபிடிக்கக் கூடாது என்றும், ரஷ்ய கொடியையும் இந்திய சர்க்கார் மூவர்ணக் கொடியையும்தான் பிடிக்கவேண்டும் என்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய செயற்குழு தனது கட்சி உறுப்பினர்களுக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறதாம்.

மார்ஷல் புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் செல்லும் பாதை ஓரங்களில் எல்லாம் பெருத்த அளவில் கூடுமாறு, கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்களையும் ஆதரவாளர்களையும் செயற் குழுவினர் கேட்டுக் கொண்டிருக்கின்றனராம்.

இந்திய கம்யூனிஸ்டுகள் ஒரு கட்சியினர் என்ற முறையில் ரஷ்யத் தலைவர்களை வரவேற்காமல் குடிமக்கள் என்ற முறையில் வரவேற்கவேண்டும் என்பதற்காகவே இவ்விதம் கட்டளை இடப்பட்டது என்று, கட்சியின் உயர்தர உறுப்பினர் ஒருவர் கூறினாராம்.

இலங்கை தோழர்கட்கு அறிவிப்பு

★

'நம் நாடு' இதழ் சென்னையில் வெளியாகும் அந்தத் தேதியிலேயே இலங்கையிலும் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று அங்குள்ள தோழர்கள் விரும்புவதாக, நமது இலங்கை விற்பனையாளர் தெரிவித்திருக்கிறார். 'நம் நாடு' இதழ் சென்னையிலேயே மாலைப் பதிப்பாக வெளியிடப்படுவதால், அன்று மாலையே இலங்கையிலும் கிடைக்கச் செய்வது இயலாததாக இருக்கிறது. எனவே, மறு நாள் புறப்படும் விமானத்தில் அனுப்பப்பட்டு, சென்னையில் வெளியான மறு நாள் (வெளியூர் தேதி) இலங்கைத் தோழர்கட்கு இதழ்கள் கிடைக்குமாறு வழக்கப்படியே அனுப்பப்படுகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

—பொறுப்பாளர்,
'நம் நாடு'

கண்ணமங்கலம்—போளூர் (வ.ஆ.)

வட்ட தி. மு. கழகச் செயலாளர்களுக்கு

★

"20—11—55 ஞாயிறு பகல் 2 மணிக்கு கண்ணமங்கலம் திருவள்ளுவர் திடலில் தோழர் முல்லை-சத்தி அவர்கள் தலைமையிலும், அன்று மாலை 6 மணிக்கு போளூரில் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையிலும், மாநில மாநாட்டு நிதி அளிப்புக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் நிதி அளிக்கப்படும். கண்ணமங்கலம் — போளூர் வட்டத்திலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள் அன்று தங்கள் தங்கள் கிளைக் கழகத்தின் பங்குத் தொகையை அளித்து நம் மாவட்டத்தின் கோட்டாவைப் பூர்த்தி செய்ய வேண்டுகிறேன். செயலாளர்கள் உடனடியாக நிதி வசூலில் ஈடுபட வேண்டுகிறேன். இம்மாத இறுதிக்குள் நம் மாவட்ட கோட்டாவை பூர்த்திச் செய்ய ஒத்துழைக்க வேண்டுகிறேன்,"

என்று, வடாற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

சிறப்புச் சொற்பொழிவு

★

27—11—55 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு பெங்களூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் பெங்களூர் சர். கே. பி. புட்டண்ணா செட்டி நகர மண்டபத்தில், மாநில மாநாட்டு நிதிக்காக, தோழர் எஸ். வி. பதி தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சத்தியநாராயணா, முல்லை-சத்தி, மு. கருணாநிதி ஆகியோர் பேசுவர். நன்கொடை ரூ. 1—0—0, ரூ. 0—8—0.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன். எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.